සියලම හිමිකම් ඇවිරිණි / All Rights Reserved

T I

10 ශ්‍රේණිය - (පළමු වාර) විශේෂ ඇගයීම - 2022
தரம் 10 - விசேட மீளாய்வு - 2022
Grade 10- Special Evaluation(First Term) - 2022

ඉතිහාසය **History**	I I	පැය එකයි **One hour**

.කවණික්ක:

- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள புள்ளடித்தாளில் ஒவ்வொரு வினாவுக்குரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.**
- **பகுதி I வினாப்பத்திரத்துக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.**

பகுதி I

01) இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் மிகப் பழைமையான இலக்கிய மூலாதாரமாக விளங்குவது,
1) மகாவம்சம் 2) தீபவம்சம்
3) சூளவம்சம் 4) உத்தர விஹார அட்டகதா

02) கல்வெட்டு மூலாதாரமொன்றைப் பயன்படுத்துவதில் உள்ள மிகவும் சிறந்த அம்சமாகக் கொள்ளக் கூடியது,
1) விரிவாக தகவல்களை அறிய உதவுகின்றது
2) தெளிவாக தகவல்களைக் குறிப்பிடுவது
3) நிகழ்வுகளின் சமகாலத்துக்குரியது
4) தொடர்ச்சியான தன்மை கொண்டது.

03) அருகில் காட்டப்பட்டுள்ள நபரினால் வரையப்பட்ட உலகப்படத்தில் இலங்கைக்கு வழங்கியிருந்த பெயர்
1) தப்ரபேன்
2) சிலோன்
3) செரண்டிப்
4) தம்பபண்ணி




04) இலங்கையில் கம்பளை முதல் கோட்டை வரையபன காலப்பகுதியில் புத்தசாசன வளர்ச்சி பற்றியும் அரசியல் தகவல் பற்றியும் வெளிப்படுத்தும் நூல்களாக அமைவன,
1) சத்தர்மலங்கார, பூஜாவலிய 2) நிகாய சங்கிரஹய, தாதுவம்சம்
3) நிகாய சங்கிரஹய, ராஜாவலிய 4) ராஜாவலிய, பூஜாவலிய

05)

நிரல் A	நிரல் B
1. குகைக்கல்வெட்டு	A) மலர் ஆசனங்கள் போன்ற கற்பலகையில் எழுதப்பட்டது.
2. பாறைக்கல்வெட்டு	B) கற்பீலிகளின் அருகில் எழுதப்பட்டது.
3. சுவர் கல்வெட்டு	C) கற்பாறைகளின் மேல் எழுதப்பட்டது.
4. இருக்கைக்கல்வெட்டு	D) செப்பனிட்ட கற்பலகையில் எழுதப்பட்டது.

மேற்குறிப்பிட்ட விடயங்களை சரியாக பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடை.
1) ABCD 2) DBCA 3) ACDB 4) BCDA

06) அருகிலுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ள நாணயம் புராதன இலங்கையில் பயன்படுத்தப்பட்ட நாணயமாகும் இது உருவாக்கப்பட்ட உலோகம்



1) வெள்ளி 2) செப்பு
3) இரும் 4) தங்கம்

07) ≺ அதிக நாணயங்கள் வெளியிடல்
≺ அதிக தங்க நாணயங்கள் வெளியிடல்
≺ வெளிநாட்டு வர்த்தகத்துக்கென பிரத்தியேக நாணயங்களை வெளியிடல்

மேற்குறிப்பிட்ட சிறப்புகளையுடைய இலங்கையின் ஆட்சியாளன்
1) மகாசேனன் 2) 1ம் விஜயபாகு
3) 1ம் பராக்கிரமபாகு 4) நிஸங்கமல்லன்

08) இலம்பகர்ண வம்ச மன்னர்களுள் வசப மன்னனின் ஆட்சி அதிகாரம் தெற்கு நோக்கி பரவலடைந்திருந்தமைக்கான ஆதார கல்வெட்டாக கருதக்கூடியது
1) வல்லிபுர சாசனம் 2) கல்பொத்த கல்வெட்டு
3) திஸ்ஸமகாராம கல்வெட்டு 4) கொடவாய தூண் கல்வெட்டு

09) தொழினுட்ப திறன்கள், இராணுவ அறிவு, அழகியல் இரசனை மிக சூழல் முதலிய அறிவுகள் பண்டைய மக்களிடம் காணப்பட்டது என்பதனை ஒருங்கே வெளிப்படுத்திக் காட்டத்தக்க ஆக்கம்
1) அவுக்கண சிலை 2) சீகிரியா
3) யோத கால்வாய் 4) மாதுறு ஓயா

10) இலங்கையில் கண்டறியப்பட்டுள்ள தொல்பொருள் மூலாதாரங்களுள் வெளிநாட்டு நாணயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நாட்டுத் தொகுதி
1) உரோம், பர்மா, கிரேக்கம் 2) உரோம், சீனா, இந்தியா
3) சீனா, அரேபியா, எகிப்து 4) எகிப்து, பர்மா, உரோம்

11) விகாரைகள் மற்றும் ஆராமைகள் கட்டப்படுவதற்கு முன்னர் பிக்குகள் இலங்கையில் வசித்தது.
1) குகைகளில் வசித்தனர் 2) வீடுகளில் வசித்தனர்
3) பன்னசாலைகளில் வசித்தனர் 4) ஆராமைகளில் வசித்தனர்

12) வரலாறு எழுதும் முறைக்கு அடிக்கோலியவர்களாக கருதப்படக்கூடிய இனத்தவர்களாக விளங்குபவர்கள்
1) அயோனியர் 2) உரோமர் 3) பாரசீகர் 4) காம்போஜகர்கள்

13) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் வாழ்ந்த பாகியன்கல குகை அமைந்துள்ள மாவட்டமாக அமைவது
1) கம்பஹா 2) அநுராதபுரம் 3) இரத்தினபுரி 4) களுத்துறை

14) கிருந்தி ஓயாவுக்கு குறுக்கே முதன் முதலில் அணை ஒன்றை அமைத்து திஸ்ஸமகாராம எனும் குளத்தை உருவாக்கிய ஆட்சியாளன்
1) அபயநாகன் 2) 1ம் அக்போ 3) தாதுசேனன் 4) இளநாகன்

15) நில மட்டத்திலிருந்து சுமார் 45 அடி ஆழத்தில் காணப்படும் இரணைமடுப் படிவிற்குரிய சரளைக் கற்படிவுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் இது 125 000 வருடங்கள் பழமை வாய்ந்ததாகவும் கருதப்படுகின்றது. அவ் இடம்
1) மானியன்கம 2) உடமல்ல 3) பதிராஜவெல 4) ஹல்துமுல்ல


16) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் உடலமைப்பு தொடர்பான பிழையான கூற்றாக அமைவது
1) ஒரு ஆண் சாதாரணமாக 174 cm உயரம் உடையவன்

2) ஒரு பெண் சாதாரணமாக 166 cm உயரம் உடையவள்.
3) ஆண் பெண் இருபாலாரின் மூளையும் ஒரே அளவு உடையதாக காணப்பட்டது.
4) அகன்ற மூக்கு பெரிய நாடி என்பவற்றைக் கொண்டிருந்தமை.

17) A. உடரஞ்சாமடம் B. பெரகல C. கல்சொஹென் D. ஹல்தமுல்ல
மேலே தரப்பட்டுள்ளவற்றுள் முன் வரலாற்றுக் காலக் குடியிருப்புகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களை சரியாக காட்டும் விடை தொகுதி
1) BC 2) AD 3) AC 4) BD

18) வரலாற்றுக் கால குடியேற்றங்கள் கூடுதலாக அமைக்கப்பட்ட தரைத்தோற்ற வலயமாக விளங்குவது
1) தாழ்நில ஈரவலயம் 2) உலர் வலயம்
3) ஈர வலயம் 4) அரை வரள்வலயம்

19) அருகில் காட்டப்பட்டுள்ள படம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் பயன்படுத்தப்பட்ட கல்லாயுதமாகும். இங்கு கல்லாயயுதம் அமைக்க பயன்படுத்தப்பட்ட ஊடகம்
1) படிகக் கற்பாறை
2) கருங்கற் பாறை
3) மஞ்சள் நிறக்கற்பாரை
4) கருமையான நிறப்பாறை



20) A வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் வாழ்ந்த குடியிருப்புகளும் B பகுதியில் அவர்களுடைய தொழில்களும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தி சரியான விடைத்தொகுதியை தெரிவு செய்க.

A தொகுதி	B தொகுதி
1) கோபாலகாம	A) குயவர்
2) கசீக்காரகாம	B) இரத்தினம் அகழ்வோர்
3) கும்பகாரகாம	C) இடையர்
4) மணிகாரகாம	D) விவசாயி

1) CDAB 2) CADB 3) CDBA 4) CBAD

21) வாபிகாம எனும் சொல்லின் மூலம் குறிப்பிடப்படுவது
1) ஆற்றை அண்டிய குடியிருப்பு
2) வேலியடைந்த குடியிருப்பு
3) வேலியடைக்கப்படாத குடியிருப்பு
4) குளத்தை அண்டிய குடியிருப்பு

22) A. சிறப்பான ஈமப்புதைப்புகள்
B. பூசு கற்களின் பயன்பாடு
மேல் வரும் விடயங்களோடு தொடர்புபட்ட காலகட்டம்
1) வரலாற்றுக்கு முற்பட்ட காலம் 2) வரலாற்றுக் காலம்
3) கற்காலம் 4) முன் வரலாற்றுக் காலம்

23) அநுராதபுரம் "மாநகரம்" என பொருள் கொள்ளத்தக்க வகையில் அழைக்கப்பட்டமைக்கான சான்றாக விளங்குவது
1) தெவனகல கல்வெட்டு 2) அம்பகமுவ கல்வெட்டு
3) பனாகடுவ செப்புசாசனம் 4) வெஸ்ஸகிரிய கல்வெட்டு

24) கீழ்வருவனவற்றுள் தாழ்நில உலர்வலய வெட்டவெளிப் பாசறையாக கருதப்படக்கூடியது
1) கித்துள்கல 2) அலிகல 3) பெல்லன் பதிபெலஸ்ஸ 4) புந்தல

25) நீண்ட காலம் நிலைத்திருந்த மனித வரலாற்றில் மண்டையோடு இரண்டாகப் பிளக்கும் வகையில் துளையிட்டு மரணச்சடங்கு மேற்கொண்ட வாழிடமாக கருதக்கூடியது
1) கித்துள்கல 2) இராவண எல்ல 3) இப்பன்கட்டுவ 4) பெலல்ன்பதிபெலஸ்ஸ

26) இலக்கிய மூலாதாரங்களில் விவரிக்கப்படும் பண்டைய காலத்துக்குக் குடியிருப்புகளில் அவதானிக்க கூடியதான பிரதான பண்புகள்
1) சமவெளிக் குடியிருப்பும், வேட்டை முறையும்
2) குளக்குடியிருப்பும், கிராமிய உருவாக்கமும்
3) நதி குடியிருப்பும், கிராமிய தோற்றமும்
4) இனக்குடியிருப்பும், அலைந்து திரிந்த வாழ்க்கை முறையும்

27) பின்வருவனவற்றுள் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
1) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் ஆயுட்காலமாக 30 - 40 வயதாக காணப்பட்டதென ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.
2) வரலாற்றுக்கு முற்பட்ட காலம் மனிதர்கள் பெரும்பாலும் இரும்பாயுதங்களையே உபயோகித்தனர்.
3) கற்கால மனிதன் முறையான மரணச் சடங்கு முறைகளை மேற்கொண்டுள்ளான்
4) கற்கால தடங்கள் பெரும்பாலும் மத்திய காலத்துக்குரியவை ஆகும்.

28) பச்சை களிமண்ணினால் செய்யப்பட்ட ஓடம் போன்ற அமைப்பினுள் மட்பாண்டங்களில் அஸ்தி பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த தடயங்கள் ஊவா மாகாணத்தில் கிடைக்கப்பெற்ற இடங்களாக அமைபவை
1) ஹல்துமுல்ல, பெரகல 2) மினிப்பே, பதுளை
3) பண்டாரவளை 4) அலுகல்கே, இரணைமடு

29) வரலாற்றுக்கால குடியிருப்பொன்றில் காணக்கூடிய பண்புகளில் ஒன்றாக விளங்குவது
1) குகைகளிலும், வெட்ட வெளிகளிலும் பெரும்பாலும் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டமை
2) குடியிருப்புகள் பெரும்பாலும் சிதறி கிடந்தமை
3) அதிகமான குடியிருப்புகள் பெரும்பாலும் நதிகளுக்கு அண்மையில் அமைந்திருந்தமை
4) குடியிருப்புகள் பெரும்பாலும் குளமொன்றினை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது.

30) அரசுக்கு முற்பட்ட காலத்தில் ஆட்சியாளராகக் கருதப்பட்டவர்கள்
1) குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள்
2) சிறிய பிரதேசங்களில் நிலபுலன்களைக் கொண்டவர்கள்
3) பரம்பரை முடிக்குரிய ஆட்சியாளர்கள்
4) குளத்தொகுதி ஒன்றின் தலைவனாகக் காணப்பட்டவர்

31) சங்கமித்த வெள்ளரசுக் கிளையுடன் வந்திறங்கிய இலங்கையின் பண்டைய துறைமுகம்
1) மகாதித்த 2) காலதித்த
3) ஜம்புகோளப்பட்டினம் 4) கோகர்ண

32)

நிரல் X	நிரல் Y
குதிரைப் பிரிவின் தலைவர்	A) ஹதி அதெக
யானைப் பிரிவின் தலைவர்	B) நகரவடிக
காசு அச்சிடும் பிரிவின் தலைவர்	C) நடஅதெக
நாட்டிய பிரிவின் தலைவர்	D) அச அதெக
	E) ரூப அதெக

நிரல் X இலுள்ள விடயங்களை நிரல் Y பொருத்தும் போது பெறப்படும் விடைத்தொகுதி
1) CEAB 2) BCDA 3) DAEC 4) AEBC

◈ **33, 34, 35 ஆகிய வினாக்களுக்கு கீழ்வரும் அட்டவணையை ஆதாரமாகக் கொண்டு விடை எழுதுக.**

A குட்டகண்ண அபயன்	D மின்னேரியா தெய்வம்	C அநுராதபுரம்
B மகாசேனன்	E குபேரக்கடவுள்	H தம்புள்ள
C 1ம் காசியப்பன்	F நரேஸ்வர	I இந்திரலோகம்

33) விவசாயத்துக்கு தேவையான நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுத்ததால் சிறப்பிடம் பெற்றமையைக் காட்டும் விடை தொகுதி
1) CEH 2) BDG 3) BFI 4) ADG

34) மனிதர்களில் கடவுள் என்று தன்னை அழைத்துக் கொண்ட மன்னனோடு தொடர்புடைய விடை தொகுதி
1) AEG 2) AFH 3) CEH 4) BFG

35) செல்வத்துக்கு அதிபதியான தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட மன்னனோடு தொடர்புடைய விடைத்தொகுதி
1) CEI 2) AEI 3) BEI 4) CEG

36) ஏறத்தாழ 35 000 பேர் வாழ்ந்ததாக கருதப்படும் மாகம நகரம் அமைந்திருந்த நதிக்கரையோரம்
1) கிரிந்த ஓயா 2) மல்வத்து ஓயா 3) வனநதி 4) கும்புக்கன் ஓயா

37) இலங்கை வரலாற்றில் 1ம் விஜயபாகு மன்னன் சிறந்த மன்னனாக கருதப்படுவதற்கு சூளவம்சம் கருதும் முக்கியமாக அமைவது
1) போரின் போது சிதைவுற்றிருந்த விகாரைகளைப் புனரமைத்தமை
2) உருகுணைப் பிரதேசத்தில் புதுகுணவாவியை அமைத்தமை
3) சோழர்களிடமிருந்து இலங்கையை மீட்டு சுயஆட்சியை நிலை நாட்டியமை
4) தென்னிந்தியாவை ஆக்கிரமித்தமை

38) தாதுசேனனிடமிருந்து முதலாம் காசியப்ப மன்னன் ஆட்சியுரிமையைக் கைப்பற்றியமையை காட்டும் சரியான மரபுமுறைகளில் ஒன்று.
1) தந்தையிடமிருந்து மகனுக்கு
2) ஆட்சியாளன் இல்லாத சந்தர்ப்பத்தில்
3) மூத்த புதல்வன் இல்லாமையால் இரண்டாவது மனைவியின் மூத்த புதல்வனுக்கு
4) சகோதரனிடமிருந்து சகோதரனுக்கு

39) A. கமிக சொத்து சுகங்களைக் கொண்டிருந்தான்
B. கிராம தலைவன் இல்லத்தலைவர்களிடமிருந்து தெரிவு செய்யப்படுவான்
மேற்குறிப்பிட்ட இருசம்பவங்களையும் உறுதிப்படுத்தும் ஆவணங்கள் முறையே
1) மகாவம்சம், சமந்தபாசாதீகாவ 2) சமந்தபாசாதீகாவ, தீபவம்சம்
3) ஜாதக அட்டகதா, சமந்தபாசாதீகாவ 4) மகாவம்சம் சூளவம்சம்

40) A. சாரணார்த்த சங்கிரகாய எழுதப்படல்.
B. பத்துக் கிராமங்களுக்கு ஒரு வைத்தியர் நியமனம்
C. காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கு வைத்தியசாலை நியமனம்
D. கர்ப்பிணி தாய்மாருக்கான பிரசவ விடுதிகளை நிறுவுதல்

மேற்கூறப்பட்ட சம்பவங்களுள் புத்ததாஸ மன்னனுடன் தொடர்புடைய விடயங்களைக் கொண்ட விடை தொகுதி
1) BC என்பனவாகும் 2) BD என்பனவாகும்
3) AB என்பனவாகும் 4) AC என்பனவாகும்

සියලම හිමිකම් ඇවිරිණි / All Rights Reserved

සෙන්ට් පීටර් විදුහල - කොළඹ 04
புனித் பேதுரு கல்லூரி கொழும்பு 4
St. Peter's College - Colombo 04

T II

10 ශ්‍රේණිය - (පළමු වාර) විශේෂ ඇගයීම - 2022
தரம் 10 - விசேட மீளாய்வு - 2022
Grade 10- Special Evaluation(First Term) - 2022

ඉතිහාසය History	II II

පැය එකයි
One hour

කවනික්ක:

- **முதலாம் வீனா கட்டாயமானது.**
- **IIம் பகுதியிலிருந்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**
- **இவ் வினாக்களுக்குரிய மொத்தப் புள்ளி 120 ஆகும்.**

பகுதி I

(01) அ. கீழே காட்டப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டுக.

1) ஜம்புகோளப்பட்டினம் 2) பராக்கிரம சமுத்திரம் 3) மன்னார்
4) அருவியாறு 5) அநுராதபுரம் 6) இரணைக்மடுகுளம்
7) ஜோதவாவி 8) செங்கடகல 9) கொடவாய
10) திருகோணமலை 11) கொழும்பு 12) மட்டக்களப்பு

(12 புள்ளிகள்)


ஆ. கீழே வழங்கப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் உலகப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

1) இந்தியா
2) பாக்குநீரிணை
3) கொன்ஸ்தாந்திநோபிள்
4) கஸ்பியன் கடல்
5) இத்தாலி
6) சுயெஸ்கால்வாய்

(6 புள்ளிகள்)

இ. கீழே வழங்கப்பட்டுள்ள படங்களை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.


1) A)



1. படத்தில் (A) காட்டப்பட்டுள்ள ஆவணத்தின் பெயர் யாது?
2. இதனை உருவாக்கிய மன்னர் யார்?
3. இந்த மூலாதாரம் மூலம் எந்த நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட வரலாற்று அறிய முடிகின்றது.

(6 புள்ளிகள்)

2) B)



1. படத்தில் (B) காட்டப்பட்டுள்ள அமைப்பின் பெயர் யாது?
2. இவ்வமைப்பு எந்த வரலாற்று காலத்துக்குரியது
3. இதனை கண்டுபிடித்த இடம் யாது?

(6 புள்ளிகள்)

பகுதி II

(02) 1. தொல்பொருள் மூலாதாரங்கள் மூன்றினைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

2. இலக்கிய மூலாதாரங்கள் நான்கினைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

3. A இலக்கிய மூலாதாரமொன்றை பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய மூன்று விடயங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

B இலங்கை வரலாற்றை அறிய உதவும் தென்னிந்திய இலக்கிய மூலாதாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

4. வரலாற்றைக் கற்பதன் முக்கியத்துவம் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினை விபரித்து எழுதுக. (06 புள்ளிகள்)

(03) 1. பின்வரும் எழுத்து வகைகளுக்கு உதாரணம் தருக?
A செப்புத் தகடு
B பொன் தகடு
C மரப்பலகை (03 புள்ளிகள்)

2. பின்வரும் இலக்கிய மூலாதார வகைக்கு ஒவ்வொரு உதாரணம் தருக?
A கிரேக்க மூலாதாரம்
B உரோம மூலாதாரம்
C சீன மூலாதாரம்
D போர்த்துக்கேய மூலாதாரம் (04 புள்ளிகள்)

3. துட்டகைமுனு மன்னனின் அரசியல் மற்றும் சமூகப்பணிகளை குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

4. வசப மன்னன் இந்நாட்டின் முக்கியமான ஆட்சியாளர்களுள் ஒருவன் என்பதனை மூன்று காரணிகள் மூலம் விளக்குக. (06 புள்ளிகள்)

(04) 1. A, B, C இனால் காட்டப்பட்டவர்களின் பதவிப் யெபர்களைக் குறிப்பிடுக.

A குடும்பங்களுக்கு தலைமை தாங்குபவர்
B கிராமத்துக்கு தலைமை தாங்குபவர்
C குளத்தொகுதியை நிர்வகிப்பவர் (03 புள்ளிகள்)

2. கீழ்வரும் சம்பவங்களுடன் தொடர்புடைய புராதன குகைகளை முறையே பெயரிடுக.

A கி.மு 35 000 வருடங்களுக்கு முன்னர் மனிதன் வாழ்ந்த குகை
B நத்தைகளில் உப்பு பயன்படுத்தப்பட்டதை காட்டும் குகை
C ஆசனிப்பலா, காட்டு வாழை போன்றவற்றை உணவாக உட்கொள்ளப்பட்டதை கண்டறிந்த குகை
D வளைந்துப் புதைக்கப்பட்ட எலும்புக்கூடு கண்டறிந்த குகை (04 புள்ளிகள்)

3. முன்வரலாற்றுக் காலம் கட்டியெழுப்பப்படுவதற்கான காரணிகள் எவையேனும் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

4. வரலாற்றுக் காலக் குடியிருப்புக்கள் உருவாக்கப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட விதத்தினை கீழ்வரும் தலைப்புக்களில் விளக்குக.

A பௌதீகச் சூழல்
B குடியேற்றத்தின் கட்டமைப்பு (06 புள்ளிகள்)

05) 1. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் வாழ்ந்த கீழ்வரும் இடங்கள் அமைந்துள்ள தற்போதைய மாவட்டங்களைக் குறிப்பிடுக.

A இரணைமடு
B பொம்பரிப்பு
C இராவண எல்ல (03 புள்ளிகள்)

2. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த தாழ்நில உலர்வலயக் குகைகள் இரண்டினையும் மலையக வெட்டவெளிப் பாசறைகள் இரண்டையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

3. கற்கால மனிதர்களின் உணவுப்பழக்கவழக்க முறைகளை இரு காரணிகளின் துணையுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

4. வரலாற்றுக்கால இலங்கையில் விவசாயம் மேற்கொள்ளப்பட்ட முறையினை விபரித்து எழுதுக. (06 புள்ளிகள்)

06) 1. கீழ்வருவனவற்றுள் ஊடாக அறியப்படும் அதிகாரிகளை அதே ஒழுங்கில் எழுதுக.

A பதகு
B கனபெடிக
C படகாரிக (03 புள்ளிகள்)

2. கீழே A,B,C,D எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடைகளை ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A முதலாம் விஜயபாகு மன்னனுக்கு இளவயதில் பாதுகாப்பு வழங்கிய அதிகாரி
B இலங்கை வரலாற்றில் முதலாவதும் முறையானதுமான யுத்த செயற்பாட்டுக்கு தலைமைத்துவத்தை வழங்கியவர்.
C பொலன்னறுவை இராசதானியாக தெரிவு செய்யப்பட செல்வாக்குச் செலுத்திய தலையாய காரணி
D சத்திரியகுல மரபின் அடிப்படையில் முதன்முதலில் முடிசூடிய இலங்கை மன்னன். (04 புள்ளிகள்)

3. மன்னர்கள் தமது நாட்டுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் என உணர்ந்திருந்த விடயங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

4. வரலாற்றுக்கால இலங்கையில் குளத்தொகுதி ஒன்றின் தோற்றத்துக்கு வித்திட்ட காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

07) 1. பின்லவரும் மன்னர்கள் தோற்றம் தர விரும்பிய விதத்தைக் குறிப்பிடுக.

A குட்டகண்ண அபயன்

B 1ம் காசியப்பன்

C மகாசேனன் (03 புள்ளிகள்)

2. கீழே A, B, C, D எனத் தரப்பட்டள்ள சொற்கள் குறிக்கும் பெயரினை எழுதுக.

A எல்லங்காவ


B ரஜ


C பிராசின அரசன்

D வெவ்பிரபாதனய (04 புள்ளிகள்)

3. புராதன் கிராமங்களின் தலைவர்களாக விளங்கியவர்களிடம் எதிர்பார்த்த பணிகள் மூன்றைத் குறிப்பிட்டு விபரித்து எழுதுக. (05 புள்ளிகள்)

4. பிராந்திய அரசுகளிடையே நல்லுறவை வளர்த்தெடுக்கும் தேவையை தேவநம்பிய திஸ்ஸ மன்னன் உணர்ந்திருந்தான் என்பதனை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (06 புள்ளிகள்)


வ


0